1972 சனவரி 29]

கதர் கிராமத்தொழில் வாரியம்.

*** 145 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பணிகள் நகரத்தோடு நின்றுவிடாமல் கிராமங்களுக்கு எட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்.

***146 வினா—திரு. என். கிட்டப்பா.** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழிலுக்காக 1971-72-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசு வழங்கிய உபரி மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இன்னும் மானியம் வழங்கப்படவில்லை.

பிற மாநிலங்களிலிருந்து கதர் வாங்கல்.

*** 147 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் நூற்பதற்கு வேண்டிய பஞ்சம் கதர்த் துணிகளுக்கு பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதை தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

திருப்பூர் கூட்டுறவு பண்டகசாலை.

*** 148 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள கூட்டுறவு மத்திய பண்டகசாலை எப்போது துவங்கப்பட்டது?

(இ) 15-6-67-ம் தேதி முடிய எத்தனை முறை தணிக்கையும் சோதனையும் செய்யப்பட்டது?

(உ) இந்த சோதனைகளின் மூலமாக குற்றங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 1962ல் இந்தப் பண்டகசாலை துவங்கப்பட்டது.